# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0024/2017/ந

ஆணை எண்: 165/2017

நாள்: 20/06/2017

திரு. மு. கருப்பசாமி,
த/பெ. முனியாண்டி,
அண்ணாகாலனி, திருத்தங்கல்,
விருதுநகர் மாவட்டம்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருத்தங்கல் நகராட்சி,
திருத்தங்கல்,
விருதுநகர் மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் திரு. மு. கருப்பசாமி என்பவரது 29.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு 06.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0024/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் திருத்தங்கல் நகராட்சி ஆணையர் சாதிய ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாரெனவும் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையிலும் செயல்படுகிறாரெனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு திருத்தங்கல் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0024/2017/ந நாள்:08.02.2017ல் ஆணையிடப்பட்டது. மேலும், 27.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை (அ.ம.எண்.0024/2017 நாள்:15.02.2017) அனுப்பப்பட்டது.

இதனிடையே மனுதாரர் அனுப்பி வைத்த ஆவண நகல்களைப் பரிசீலித்ததில் மனுதாரரது 21.06.2016 நாளிட்ட கடிதத்தில் திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் 2016-2017ல், தெரு விளக்குகள் பராமரிப்புப் பணிக்கு ஒப்பந்தம் கோரி நகராட்சி ஆணையரிடம் விண்ணப்பித்துள்ளது தெரிய வருகிறது. மேலும், மேற்படி பணி ஒப்பந்தம் முறையீட்டு மனுதாரருக்கு வழங்கிட 30.06.2016 அன்று நடைபெற்ற நகர் மன்ற கூட்டத்திலும் தீர்மான எண்.2334-ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது புலனாகிறது.

இந்நிலையில் திருத்தங்கல் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.63/2016/இ1 நாள்:7.3.2017 வரப்பெற்றது. இவ்வறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"திரு. எம். கருப்பசாமி, ஒப்பந்ததாரர் நாளது தேதிவரை நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்ததில்லை. அவரால் பணிபுரிய அனுப்பப்பட்ட பணியாளர்களே வருகை தந்துள்ளனர். சாதி ரீதியான குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது...

ஒப்பந்த பணியினை நகராட்சி பொறியாளர் ஆய்வு செய்த போது கீழ்கண்ட குறைபாடுகளை காணப்பட்டன:-

i) ஒப்பந்ததாரர் தெரு விளக்கு பராமரிப்பிற்கான தகுதி வாய்ந்த பணியாளர்களை பணி அமர்த்தவில்லை.

ii) பணிபுரியும் மின் பணியாளர்களுக்கு உரிய காப்பீடு வசதி பெறப்படவில்லை.

iii) பாதுகாப்பு உபகரணங்கள் பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரால் வழங்கப்படவில்லை.

மேலும் மாற்றப்பட்ட பழைய மின் உபகரணங்கள் மற்றும் விளக்குகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டும் நாளது தேதி வரை குறைகளை நீக்குவதற்கான நடவடிக்கையோ, விளக்கமோ அளிக்கவில்லை என்றும் மாற்றப்பட்ட மின் சாதனங்களை ஒப்படைத்தல், பணிபுரியும் பணியாளர்களுக்கான காப்பீடு செய்தல், சேம நல நிதி பணியாளர்களுக்கு செலுத்திய விவரங்களை சமர்ப்பித்தால் மட்டுமே அன்னாருக்கு ஒப்பந்தத் தொகை வழங்க இயலுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் நகராட்சியினால் நாளது தேதிவரை ரத்து செய்யப்படாமல் நடைமுறையில் உள்ளதெனவும் மனுதாரர் அனைத்து குறைகளையும் சரி செய்து ஒப்பந்த தொகையினை பெற்றுக் கொள்ளலாமெனவும் நகராட்சி ஆணையரால் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் 27.03.2017 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இருப்பினும், மனுதாரருக்கு கூடுதல் வாய்ப்பளித்திட முடிவு செய்து நகராட்சி ஆணையரது பதிலறிக்கையின் நகல் அனுப்பி வைக்கப்பட்டு, நகராட்சியின் அறிவிப்பு ந.க.எண்.63/2016/இ1 நாள்:31.10.2016 குறித்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விளக்கங்களின் நகலுடன் அவர் கூறிக் கொள்ள விரும்பும் விளக்கங்கள்/விவரங்கள் ஏதுமிருப்பின் இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு அறிவிப்பாணை (மு.ம.எண்.0024/17/ந நாள்: 06.05.2017) அனுப்பப்பட்டது.

அவ்வாறிருப்பினும் முறையீட்டு மனுதாரரிடமிருந்து எந்தவித விளக்கங்களும் வரப்பெறவில்லை. எனவே, அவர் தரப்பில் இம்முறைமன்ற நடுவத்திடம் கூறிக்கொள்ள முகாந்திரம்/விளக்கம் ஏதுமில்லை என கருதப்படுகிறது. இருப்பினும், மனுதாரரை விசாரித்து சட்ட விதிகளுக்குட்பட்டும், நடைமுறைகளுக்குட்பட்டும் உரிய தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தி திருத்தங்கல் நகராட்சி ஆணையருக்கு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு **அலுவலக முத்திரையிட்டு** இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 23.6.17

**பெறுநர்**

1. நகராட்சி ஆணையர்,
   திருத்தங்கல் நகராட்சி,
   திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

2. திரு. M. கருப்பசாமி,
   த/பெ. முனியாண்டி,
   அண்ணாகாலனி, திருத்தங்கல்,
   ஒப்பந்ததாரர் திருத்தங்கல் நகராட்சி. } நகராட்சி ஆணையர் மூலமாக